# குளித்தலை நகராட்சி

31.12.2020.ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் டிசம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.ரா.ராதா அவர்களின் டிசம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி அவர்களின் திருஉருவ சிலை அமைந்துள்ளது. அதனை சுற்றி வேலி அமைத்து பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களின் (ந.க.ஈ2/15903/2020) கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை பாதுகாப்பு கருதி பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.45,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1411/2020/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இனங்களில் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளபடி வைப்புத் தொகை, சால்வன்சி மதிப்பு மற்றும் கூடுதல் வைப்புத் தொகை நிர்ணயம் செய்யவும் 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டு குத்தகை இனம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | உரிமையாணை இன விபரம் | செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை | சொத்து மதிப்பு சான்றிதழ் தொகை | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1) | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 7,00,000/– | 12,00,000/– | 7,00,000/– |
| 2) | 2–சக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் | 5,00,000/– | 7,00,000/– | 4,00,000/– |
| 3) | நவீன கழிவறையில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000/– | 3,00,000/– | 2,00,000/– |
| 4) | தினசரி சாலைஓரக் கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | 10,00,000/– | 25,00,000/– | 10,00,000/– |
| 5) | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல் உரிமம் | 1,00,000/– | 2,00,000/– | 1,00,000/– |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1769/2020/அ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் குளித்தலை நகராட்சி 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் ODF+1 இல்லாத நகராட்சியாக பிரகடனப்படுத்த பொதுமக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபணைகள் குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் இரண்டு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு செலவினம் ரூ.9000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1578/2020/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட ஆணையர் குடியிருப்பின் பின்புறம் GIசெட் அமைக்கும் பணியும் மற்றும் முன்புறம் திறந்தவெளியாக இருப்பதாலும், தற்போது உள்ள அறை போதுமானதாக இல்லாததாலும் முன்புற காலியிடத்தை ஒரு படுக்கை அறையாக அமைத்துக்கொள்ளவும், இதர மராமத்து பணிகள் செய்ய வேண்டி உள்ளதால், மேற்படி பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,80,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2020–2021 திருத்திய மதிப்பீட்டில் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1709/2020/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பழையகோர்ட்தெருவில் உள்ள திரு.V.சீத்தாராமன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில், இந்து சமய அறநிலையத் துறை செயலாளர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.WP.No.8961 & 8995/2020இல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் 01.12.2020இல், ஆணையர், குளித்தலை நகராட்சியை இவ்வழக்கில் மூன்றாம் பிரதிவாதியாக சேர்க்க மனு செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கை திரு.லூர்துபவுல்மௌரியா, நகராட்சி நிலை வழக்கறிஞர், சென்னை ஆஜராகி நடத்தவும், இவ்வழக்கிற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1954/2013/பி2)

பொருள்– 08. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19775/ஜே2/2019–3இன்படி குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் முடிதிருத்தம் / அழகு நிலையம் / ஸ்பா மற்றும் மசாஜ் நிலையம் நடத்துவோர் தொழில் உரிமம் தொடர்பான சட்ட திருத்தம் குறித்து தினமலர் நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்தமைக்கு செலவினம் ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1832/2020/எச்1)

..4..

பொருள்– 09. குளித்தலை நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.3 மற்றும் வார்டு எண்.7இல் உள்ள பழுதடைந்த மினிபவர் பம்ப் HDPE டேங்க் மாற்றுதல் பணிக்கு, ரூ.50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.109, நாள்–30.11.2020இல் அனுமதி வழங்கியதன்பேரில் 18.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி வார்டு எண்.3 மற்றும் வார்டு எண்.7இல் உள்ள மினிபவர் பம்ப் HDPE டேங்க் மாற்றுதல் பணி. | திரு.B.ஜெயபிரகாஷ், கருப்பூர். | 0.06 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.12 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.06 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.B.ஜெயபிரகாஷ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1687/2020/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.15, மலையப்பநகர் வாய்க்கால் பாலத்தில் கைப்பிடி சுவர் அமைத்தல் பணிக்கு ரூ.50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.110, நாள்–30.11.2020இல் அனுமதி வழங்கியதன்பேரில் 18.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி வார்டு எண்.15, மலையப்பநகர் வாய்க்கால் பாலத்தில் கைப்பிடி சுவர் அமைத்தல் | திரு.B.ஜெயபிரகாஷ், கருப்பூர். | 0.52 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.71 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.52 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.B.ஜெயபிரகாஷ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1611/2020/இ1)

பொருள்– 11. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற காந்தி மோட்டார், ஈரோடு பனிமனையில் வாகனத்தை ஒப்படைப்பு செய்து, பழுதினை நீக்கம் செய்தும், தகுதிச்சான்று பெற்று நகராட்சிவசம் ஒப்படைப்பு செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.75000/–க்கு (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1814/2020/எச்1)

பொருள்– 12. அரசாணை எண்.213, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–23.06.2020இல், குளித்தலை நகராட்சிக்கு 15வது நிதிக்குழுவின் மூலம் முதல் தவணைத் தொகை ரூ.48,19,043/– வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்கு குறிப்பிட்ட பணிகள் எடுக்க அறிவுறுத்தியதின்படி, நகரில் தினந்தோறும் உருவாகும் குப்பைகளை நவீன முறையில் எரிக்கும் இயந்திரம் (5TPD) வாங்கி பொருத்துவதற்கும் மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்கவும் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1) | நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பணிக்கு (5TPD) இயந்திரம் நிறுவும் பணி | 47.00 லட்சம் |
| 2) | வார்டு எண்.1இல் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் தொட்டி வைக்கும் பணி. | 1.20 லட்சம் |
| | மொத்தம் | 48.20 லட்சம் |

மேற்கண்ட பணிகளில் வ.எண்.1.ற்கான பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). 15வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2020/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சியில் தணிக்கையில் நகராட்சி நிதி கையாடல் கண்டறியப்பட்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கையாடல் நடைபெற்ற காலத்தில் 01.03.2019 முதல் 18.08.2019 வரை ஆணையர் பொறுப்பு கூடுதலாக கவனித்துவந்த திரு.M.கார்த்திகேயன், பொறியாளர் கையாடல் தொடர்புடைய காசோலைகளை கையொப்பமிட்டு அனுமதித்து உள்ளார். அது பொருள் தொடர்பான காவல் துறையினரால் முதல் தகவல் அறிக்கை அன்னாருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ள நிலையில், மேற்படி முதல் தகவல் அறிக்கையினை ஆட்சேபணை செய்தும், இடைக்கால தடை கோரியும், திரு.M.கார்த்திகேயன், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) எண்.13942/2020இல் வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.லூர்துபவுல்மௌரியா, சென்னை அவர்களை நியமித்ததற்கும், வழக்காடு கட்டணம் ரூ.15,000/–ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.941/2020/சி1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கும், டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு குடியிருப்பு வீடுகளில் புகை மருந்து அடிக்க வேண்டியுள்ளது. ஆதலால் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டுவரும் சிறிய புகைபோக்கி இயந்திரம்–12, பெரிய புகைபோக்கி இயந்திரம்–2 ஆகிய புகைபோக்கி இயந்திரத்தை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1696/2020/எச்1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சிமூலம் செயல்படுத்தப்பட்டுவரும் அம்மா உணவகத்தில் காலை மற்றும் மதிய உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் மக்களின் விருப்பத்தினை ஈடுசெய்யும் நோக்கில் தோசை மற்றும் சப்பாத்தி இவைகள் தயார் செய்ய தோசைக்கல் மற்றும் அடுப்பு வாங்க வேண்டி உள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி குளித்தலை நகராட்சியில் உள்ள அம்மா உணவகத்திற்கு நிரந்தர பயன்பாட்டிற்கான அடுப்பு, தோசைக்கல் வாங்க உள்ளூர் விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி பெறப்பட்டது.

| வ. எண். | நிறுவனத்தின் விபரம் | விலைப்புள்ளி (ரூ.) | |
|---|---|---|---|
| | | தோசைக்கல் | அடுப்பு |
| 1) | RLS இஞ்ஜினியரிங், முசிறி சாலை, குளித்தலை | ரூ.18700/– | ரூ.5000/– |
| 2) | பாபு டிங்கல் ஒர்க்ஸ், கரூர்–திருச்சி மெயின்சாலை, குளித்தலை. | ரூ.19000/– | ரூ.6000/– |
| 3) | ஸ்ரீசக்தி டிங்கரிங் அன்ட் வெல்டிங் ஒர்க்ஸ், கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.18500/– | ரூ.4600/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3இல் கண்ட ஸ்ரீசக்தி டிங்கரிங் ஒர்க்ஸ், குளித்தலை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி மிக குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் அம்மா உணவகத்திற்கு தேவையான தோசைக்கல், அடுப்பு வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1640/2020/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காவேரிநகர் (Near அண்ணா மண்டபம் ரோடு), பேருந்து நிலையம் பின்புறம் உள்ள சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால், பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதென ஆய்வுக்கூட்டத்தில் சார் ஆட்சியர், குளித்தலை தெரிவித்துள்ளார். மேற்கண்ட சாலையினை புனரமைப்பு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவுத் தொகையை 2020–2021ஆம் நிதியாண்டில் பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1812/2020/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சி இரண்டாம்நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. குளித்தலை நகராட்சியில் (அலுவலகம்) உள்ள கழிவறை மிகவும் பழுதடைந்து உள்ளது. இவை 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே, கழிவறை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனை சரிசெய்ய இயலாதநிலை உள்ளது. புதியதாக கழிவறை அமைப்பது மிகவும் அவசியம் என்பதால், அதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,50,000/–த்திற்கு (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவுத் தொகையை 2020–2021ஆம் நிதி ஆண்டில் பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1826/2020/இ1)

பொருள்– 18 2019–2020.ஆம் ஆண்டிற்கான குளித்தலை நகராட்சியின் நிர்வாக அறிக்கை(Administration Report) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1184/2020/பி1)

பொருள்– 19. குளித்தலை நகராட்சி வார்டு எண்.22, காவேரிநகர், கதவு இலக்கம் எண்.80D, 83ஏ, 83பி, 83சி–இல் உள்ள கட்டிடத்தின் சொத்துவரியினை பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக திரு.எஸ்.ஜெயவேல் என்பவர், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில், குளித்தலை நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No.23251/2019ற்கு நாள்–05.11.2019இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மனுதாரரின் 08.02.2018ஆம் தேதிய ஆவணங்களுடன் மனுவை உரிய பரிசீலனை செய்து, எட்டுவார கால அவகாசத்திற்குள் உரிய உத்தரவு பிறப்பிக்க உத்தரவிடப்பட்டது. மனுதாரர் உரிய ஆவணங்களுடன் நகராட்சிக்கு விண்ணப்பிக்காததால், காலதாமதமாகிவிட்டது. இதனை தொடர்ந்து மனுதாரர் நீதிமனற உத்தரவை செயல்படுத்தாமைக்கு கண்டனம் தெரிவித்து (Contempt Petition) வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு தாமதத்திற்கு, அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் அவர்களை மாற்றி, நகராட்சி நிலை சட்ட வழக்கறிஞர் திரு.லூர்துபவுல்மெளரியா அவர்களிடம் வழக்கு ஆவணங்கள் ஒப்படைக்கவும் அதற்குரிய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.503/2018/எச்1)

பொருள்– 20. குளித்தலை நகராட்சியின் 2019–2020ஆம் ஆண்டிற்கு கரூர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு, வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதி ஆகிய நிதிகளுக்கு தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

மேலும், 01.04.2020 முதல் 31.07.2020 வரை உள்ள காலத்திற்கு கரூர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் சிறப்புத் தணிக்கை மேற்கொண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதி ஆகிய நிதிகளுக்கு தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1881/2020/பி1)

பொருள்– 21. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் 135 கம்பங்களில் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் எரிந்து வருகிறது. மேற்கண்ட சோடியம் ஆவி விளக்குகளால் மிகுந்த அதிக அளவில் மின்சாரம் தேவைபடுகிறது. எனவே, நகராட்சியுடைய வருவாயில் மின்கட்டணத்திற்காக அதிக தொகை செலவினம் ஏற்படுகிறது. எனவே மின் சிக்கனம் மற்றும் மின் கட்டணத்தை குறைக்க மேற்கண்ட கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள சோடியம் ஆவி விளக்குகளை அகற்றி விட்டு அவ்விடத்தில் 60 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகளை பொறுத்தும்பட்சத்தில் நான்கில் மூன்று பங்கு மின்சாரம் செலவினம் கட்டுப்படுத்தலாம் என்பதனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி பயன்பாட்டிற்கு 60 வாட்ஸ் கொண்ட 150 எல்.இ.டி. பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.6,50,000/– மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத் தொகை ரூ.6,50,000/– 2021–2022ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1857/2020/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

31.12.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 115 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 116 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 117 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 118 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 119 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 120 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 121 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 122 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 123 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 124 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 125 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 126 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 127 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 128 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 129 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 130 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 131 | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 132 | பதிவு செய்யப்பட்டது. |
| 19 | 19 | 133 | அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 20 | 134 | பதிவு செய்யப்பட்டது. |
| 21 | 21 | 135 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.